DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Cross Examination of Witness PW-1

06.11.2019

அசா. 1 - பிரபாகரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 11, 12, 18, 22, 23, 24, 26, 27, 28, 29 மற்றும் 30 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

முசிறியில் உள்ள பாபு வீட்டில் நான், டாக்டர் சுரேஷ்குமார் கொடுத்ததாக சொல்லப்படும் southindia2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, எந்த மின்னஞ்சலில் இருந்து விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. southindia2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வினாத்தாளானது அதே மின்னஞ்சலில் இருந்து அனுப்பப்பட்டதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. southindia2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் வினாத்தாள் விவரங்களானது" Indbox ல் இருந்ததா அல்லது Outbox ல் இருந்ததா" என்றால், Inbox ல் இருந்தது. Inbox யை திறந்து பார்த்தபோது எத்தனை மின்னஞ்சல்கள் வந்திருந்தது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. முசிறியில் உள்ள பாபு வீட்டிற்கு சென்றபோது பாபு அங்கிருந்தாரா என்றால், இருந்தார். Email ID யை ஓபன் செய்து டவுன்லோடு செய்தபோது வினாத்தாள், JPEG, PDF, MPEG, Scanned Copy, Word Formate போன்ற எந்த Formate ல் ஓபன் ஆனது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. 20.09.2013 அன்று JM, பாலக்கோடு நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் பக்கம் 4 ல் மேலிருந்து கீழாக 5 வது

வரியில் நான், டாக்டர் சுரேஷ்குமாரிடம் வினாத்தாள் எப்படி கிடைத்தது என்று கேட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். 23.05.2014 ல் CJM, தர்மபுரி அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தின் பக்கம் 3 ல் நான், டாக்டர் சுரேஷ்குமாரிடம் வினாத்தாள் எப்படி கிடைத்தது என்று கேட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். 13.08.2018 ல் JM 3, ஈரோடு நீதிமன்றத்தில் கொடுத்துள்ள வாக்குமூலத்தின் பக்கம் 3 ல் நான், டாக்டர் சுரேஷ்குமாரிடம் வினாத்தாள் எப்படி கிடைத்தது என்று கேட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். என்னிடமிருந்து கைப்பற்றதாக சொல்லப்படும் லேப்டாப்பின் வரிசை எண், மாடல் என்னவென்றால், அது பற்றி எனக்கு தெரியாது. southindia2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியை ஓபன் செய்து பார்ப்பதற்கு எத்தனை லேப்டாப் மற்றும் மோடம் பயன்படுத்தப்பட்டது என்றால், ஒரு லேப்டாப் மற்றும் ஒரு மோடம் பயன்படுத்தப்பட்டது. பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் லேப்டாப் மற்றும் மோடம் ஆகியவற்றை பயன்படுத்திய பிறகு, லேப்டாப் மற்றும் மோடத்தை அந்தந்த ஓனரிடம் ஒப்படைத்து விட்டேன் என்றால், மோடத்தை அதன் உரிமையாளர் பிரித்திவிராஜிடம் ஒப்படைத்து விட்டேன். லேப்டாப்பை நானே வைத்துக்கொண்டேன். நான் பயன்படுத்திய லேப்டாப்பை திரும்ப கேட்டு அதன் உரிமையாளர், அதை திரும்ப கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தாரா என்றால், இல்லை. இந்த வழக்கின் 11, 12 மற்றும் 18 வது எதிரிகள் எனக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் என்றால், சரிதான். நான் இந்த வழக்கில் முதன்முதலாக கைது செய்யப்பட்ட பிறகுதான், நான் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டி, குற்ற செயல் புரிந்த காரணத்திற்காக கைது

செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால், சரிதான். நான் கைது செய்யப்பட்டபோது என்னுடன், எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை என்றால், சரிதான். நான் கைது செய்யப்பட்டபோது நான் எங்கிருக்கிறேன் என்ற விவரம் கேட்டு காவல்துறையினர் அங்கு வந்தனர் என்ற விவரத்தை அறிந்து கொண்டேன் என்றால், சரிதான். நான் கைது செய்யப்படுகின்ற வரையில் யாரிடமிருந்தும் எனக்காக வழக்கு சம்பந்தப்பட்ட வினாத்தாள் பெறவில்லை என்றால், சரிதான். நான் கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம் மற்றும் நேரம் எதுவென்றால், எனது வீட்டில் 03.09.2012 மதியம் 1 மணியளவில் நான் கைது செய்யப்பட்டேன். நான் கைது செய்யப்பட்டபோது, நான் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை போலீசார் எனக்கு அறிவுறுத்தினர் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது வீட்டில் குடும்பத்தார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால், எனது தாயார் மட்டும் என்னுடன் இருந்தார். காவல் துறையினர் வந்தவுடன் எனது தாயாரும் வெளியில் சென்றுவிட்டார். வேறு யாரும் இல்லை. பாலக்கோடு JM கோர்ட்டில் நான் வாக்குமூலம் கொடுத்தபோது, 02.09.2012 ம் தேதி நான் வீட்டிற்கு வந்தபோது தர்மபுரியில் இருந்து போலீசார் வந்தார்கள் என்றும், அவர்கள் என்னை கைது செய்தார்கள் என்றும் கூறியுள்ளேன் என்றால், சரிதான். தர்மபுரி CJM நீதிமன்றத்தில் நான் கொடுத்த வாக்குமூலத்தில், 02.09.2012 ம் தேதி நான் வீட்டிற்கு வந்தபோது தர்மபுரியில் இருந்து போலீசார் வந்தார்கள் என்றும், அவர்கள் என்னை கைது செய்தார்கள் என்றும் கூறியுள்ளேன் என்றால், சரிதான். 02.09.2012 ம் தேதியன்று காவல் துறையினர், என் முன்பாக எனது வீட்டை சோதனையிட்டனர் என்றால், சரிதான். அந்த சோதனை எத்தனை மணி முதல் எத்தனை மணிவரை நடந்தது

என்றால், ¼ மணி நேரம் நடந்தது. ¼ மணிநேர சோதனைக்கு பின்னர் காவல் துறையினர் அன்றைய தினமே என்னை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டி என்னை அழைத்து வந்துவிட்டனர் என்றால், சரியல்ல. எனவேதான் பாலக்கோடு JM நீதிமன்றத்திலும், தர்மபுரி CJM நீதிமன்றத்திலும் நான் வாக்குமூலம் கொடுத்தபோது 02.09.2012 ம் தேதியன்றே காவல் துறையினர் என்னை கைது செய்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லாமல் சொல்லியிருப்பேன். சரியாக ஞாபகம் இல்லாமல் சொல்லியிருப்பேன் என்று தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட 2 நீதிமன்றங்களிலும் கொடுத்த வாக்குமூலங்களை படித்துப் பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால், சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் 02.09.2012 ம் தேதி நான் கைது செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளதைப் பொறுத்து இதுவரை நான் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையின்போது மேற்படி நீதிமன்றங்களில் கொடுத்த வாக்குமூலங்களை C1, C2 ஆக குறியீடு செய்தபோதும் அது பற்றி ஆட்சேபிக்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் காவல்துறையினர் கைது செய்யும் வரை இவ்வழக்கின் சங்கதிகளைப் பொறுத்து நான் யாரிடமும், எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். (தற்போது சாட்சி மாற்றி தான் யாரிடமும் கூறவில்லை என்றால், சரியல்ல என்று சாட்சியம் அளிக்கிறார்.) காவல்துறையினர் என்னை கைது செய்தபோது ஒப்புதல் வாக்குமூலம் யார் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது என்றால், தென்னரசு என்ற கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளர் பரமேஸ்வரன் ஆகியோர் முன்பு பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல்

வாக்குமூலத்தில் எனது மனைவி TNPSC Group II தேர்விற்கு விண்ணப்பித்தது பற்றியோ அல்லது தேர்விற்கு தயாராகிக்கொண்டிருப்பது பற்றியோ எதாவது கூறியுள்ளேனா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எனது மனைவி பெயர் என்னவென்றால், கனிமொழி. TNPSC Group II தேர்விற்கு எனது மனைவி விண்ணப்பித்திருந்தாரா என்றால், எனது மனைவிக்கும் சேர்த்து நான்தான் விண்ணப்பித்திருந்தேன். மேற்கண்ட விபரத்தை நான் பாலக்கோடு JM நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தபோது கூறியுள்ளேன் என்றால், சரிதான். காவல்துறையினர் என்னைக் கைது செய்தபோது, என்னைக் கைது செய்திருப்பதாக கூறி வாக்குமூலம் கொடுக்கச் சொன்னார்கள் என்றால், சரிதான். காவல்துறையினர் என்னைக் கைது செய்த பின்னர், வீடு சோதனை செய்வதற்கு முன்பு காவல் துறையினர் என்னை எவ்வளவு நேரம் விசாரித்தனர் என்றால், ½ மணிநேரம் விசாரித்தனர். ½ மணிநேரம் காவல்துறையினர் என்னை விசாரித்தபோது அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தேன் என்றால், சரிதான். காவல் துறையினர் அவ்வாறு கேள்வி கேட்க கேட்க நான் கூறிய பதில்களை அவர்கள் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிக்கொண்டதில் அவர்கள் எனது கையொப்பத்தை பெற்றுக் கொண்டனர் என்றால், இல்லை. குறிப்பை யார் எடுத்துக் கொண்டார் என்றால், ஆய்வளார் விசாரிக்க உடன் இருந்த அதிகாரி குறிப்பு எடுத்துக் கொண்டார். அவ்வாறு குறிப்பு எடுத்துக்கொண்ட பிறகு என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுங்கள் என்று காவல் துறையினர் கேட்டனர் என்றால், சரிதான். கைது செய்ததாக சொல்லப்படும் இடத்தில் குறிப்பு எழுதிக்கொள்வதற்கு முன்பாக வேறு ஏதேனும் ஆவணங்கள் எழுதிக் கொண்டனரா என்றால், இல்லை. போலீசார்

என்னை கைது செய்த பிறகு என்னை எனது வீட்டுக்குள் வைத்துதான் மேற்கண்ட விசாரித்தனர் என்றால், சரிதான். என்னை வீட்டில் வைத்து என்னை கைது செய்து விசாரித்த பிறகு வீடு சோதனை செய்தபோது, கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முன் அனுமதி கோரி கொடுக்கப்பட்ட கடித தகவலையோ அல்லது கணம் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட வீடு சோதனை அனுமதி உத்தரவினையோ என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்து குறிப்புகள் எடுத்தவுடன், எனது வீட்டில் நான் வைத்திருந்த லேப்டாப்பை போலீசார் கைப்பற்றிக் கொண்டனர் என்றால், சரிதான். லேப்டாப் கைப்பற்றிக் கொண்டதற்காக கையொப்பம் ஏதேனும் பெற்றுக்கொண்டனரா என்றால், பெற்றுக்கொண்டனர். என்னைக் கைது செய்த பிறகு என்னை விசாரித்து பதிலைப் பெற்று குறிப்பு எழுதிய நிலையில்அந்த குறிப்பை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. லேப்டாப்பை என்னிடமிருந்து கைப்பற்றியதற்காக காவல் துறையினர் ஏதேனும் ஆவணம் தயார் செய்தனரா என்றால், ஆவணம் தயார் செய்தனர். மேற்படி ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்றால், உடன் வந்த காவல் துறையினர் தயார் செய்தனர். குறிப்பாக அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. முதல் விசாரணையில் கூறியுள்ளது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் நான் கைது செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. காவல் துறையினர் என்னை கைது செய்தவுடன், அனைத்து ஒத்துழைப்பும் கொடுக்கவேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டனர் என்றால், சரிதான்.

காவல் துறையினரிடம் நான் எந்த வாக்குமூலமும் தரவில்லை என்றும், என்னிடமிருந்து காவல் துறையினர் லேப்டாப்பை கைப்பற்றவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. எனது வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்றால், 2 அறைகள் உள்ளன. என்னை கைது செய்ததற்கு முன்பு காவல் துறையினர் எனது வீட்டின் அறைகளை சென்று பார்த்தனரா என்றால் சோதனையிட்டனர். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால், உடன் இருந்தேன். காவல் துறையினர் சோதனையிட்டபோது நான் லேப்டாப்பை காவல் துறையினரிடம் ஒப்படைத்தேனா என்றால், அவர்கள் சோதனை செய்தபோது லேப்டாப் அவர்களுக்கு கிடைக்கவில்லை. என்னை விசாரித்தபோது, நான் காவல் துறையினருக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுக்கவில்லை என்றால், ஒத்துழைப்பு கொடுத்தேன். 4 போலீசார் வீட்டை சோதனையிட்டு கிடைக்காத லேப்டாப்பை நான் எடுத்துக் கொடுத்தேன். சோதனையிட்ட பிறகு லேப்டாப்பை எடுத்துக் கொடுக்க எவ்வளவு நேரமானது என்றால், சோதனையிட்ட 1 நிமிடத்தில் லேப்டாப்பை எடுத்துக் கொடுத்தேன். லேப்டாப் என்னுடைய வீட்டில் எந்த அறையிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விவரம் ஆவணத்தில் எழுதப்பட்டதா என்பதை அறிந்து கொண்டேனா என்றால், அறிந்து கொண்டேன். அந்த விவரம் எழுதப்படவில்லை. லேப்டாப் எனது வீட்டின் எந்த அறையிலிருந்து எடுக்கப்பட்டது என்றால், எனது வீட்டின் சமையலறையில் இருந்து எடுக்கப்பட்டது. JM பாலக்கோடு நீதிமன்றம் மற்றும் தர்மபுரி CJM நீதிமன்றம் ஆகிவற்றில் நான் கொடுத்த வாக்குமூலத்தில், எனது வீட்டிலிருந்து ரிலையன்ஸ் மோடம் எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட விவரம் பொய்யானது என்றால், சரிதான். லேப்டாப் கைப்பற்றதாக சொல்லப்படும்

இடத்திலேயே பேக் செய்து சீல் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அந்த லேப்டாப்பை காவல் துறையினர் ஒருபோதும் என்னிடம் காண்பித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால், சரிதான். எனது வீட்டில் காவல் துறையினர் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால், 1 மணிநேரம் இருந்தார்கள். போலீசாரிடம் நான் கொடுத்தாக ஒப்புதல் வாக்குமூலத்தில் Wifi மோடம் எனது வீட்டிலிருந்து எடுத்து கொடுத்தாக கூறியுள்ளது பொய் என்றால், சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எனது வீட்டின் எந்த அறையிலிருந்து லேப்டாப் எடுக்கப்பட்டது என ஏதேனம் கூறியுள்ளேனா என்றால், அவ்வாறு எதுவும் கூறவில்லை.

(ஆவணங்களைப் பரிசீலனை செய்யவேண்டி 11, 12, 18, 22, 23, 24, 26, 27, 28, 29 மற்றும் 30 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)